
# பாட்டாளி சிந்தனை


Volume 33 No 3 சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்)

**S U C I (Communist)**

November 2022 தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டியின் மாத இதழ் விலை ரூ 5

# சகாப்தம் படைத்த நவம்பர் புரட்சி நீடூழி வாழ்க!

***"முதலாளித்துவ அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்ற எப்போதுமே அனைத்து வகையான முழக்கங்களுடனும், திட்டங்களுடனும், அனைத்து மேடைகளிலும் முன்வருவார்கள். முதலாளித்துவ அரசியல்வாதிகள் எப்போதுமே, குறிப்பாக தேர்தலுக்கு முன் வாக்குகளைக் கைப்பற்றவும் மக்களை ஏமாற்றவும் தங்களைத் தாராளவாதிகள், முற்போக்காளர்கள், ஜனநாயகவாதிகள் என்றும், 'தீவிர சோசலிசவாதிகள்' என்றும்கூட அழைத்துக்கொள்வார்கள். இது அனைத்து முதலாளித்துவ நாடுகளிலும் காணப்படும் ஒரு நிகழ்வாகும். அதனால்தான் மார்க்சும் ஏங்கெல்சும் முதலாளித்துவப் பிரதிநிதிகளை பாராளுமன்ற அதிகாரங்கள் வாயிலாக மக்களை அடக்கியொடுக்கும் பிரதிநிதிகள் என்றுகூட குறிப்பிட்டனர்."***

**– லெனின்**



# பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவர்
# தோழர் சிப்தாஸ் கோஷ்
## பிறந்த நூற்றாண்டு (05.08.1923–05.08.2023)

***"சமுதாயத்தில் தொழிலாளர்களின், விவசாயிகளின் அதிருப்தியால் புரட்சிப் பேரலையானது அலையலையாய் பொங்கிவரும். அலையலையாய் வெடித்தெழும்ப அது மீண்டும் முயற்சிக்கும். சமூகத்தில் பொங்கிவரும் முரண்பாடும் மோதல்களும் தம்மை வெளிப்படுத்த வழிதேடும். இந்த அமைப்பில் அப் புரட்சிப் பேரலையானது ஓர் அடிப்படை மாற்றத்தைக் கோரும். மனித மனசாட்சிக்கு அது உணர்ச்சிமிக்க வேண்டுகோள் விடுக்கும். மனித விழிப்புணர்ச்சியைத் தட்டியெழுப்பி புரட்சியைக்கோரி காத்து நிற்கும். ஆனால் அங்கே புரட்சி நடைபெறாது. மீண்டும் மீண்டும் பிற்போக்குவாதம் ஓங்கிநிற்கும். புரட்சியை வழிநடத்திச் செல்லத் தேவையான பலத்தைப்பெற்ற ஒரு புரட்சிகரக் கட்சி உதயமாகும் வரையில் புரட்சி காத்திருந்தேயாக வேண்டும்."***

**– சிப்தாஸ் கோஷ்**

## தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு மீதான விசாரணை ஆணையத்தின் அறிக்கை குறித்து – எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்)

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி 20.10.2022 அன்று வெளியிட்டுள்ள அறிக்கை:*

கடந்த மே 22, 2018 அன்று தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலையை மூடக்கோரி நடந்த அமைதியான பேரணியில் போலீஸ் காட்டு மிராண்டித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டதில் 13 பேர் உயிரிழந்தனர். அதை விசாரிக்க அமைத்த ஆணையத்தின் அறிக்கை இறுதியாக அக்டோபர் 18, 2022 அன்று வெளியிடப் பட்டுள்ளது. போராட்டத்தை முழுமையாக நசுக்க நிச்சயமாக அடக்குமுறையை கையாண்டுள்ளது என்பதை அறிக்கை தெளிவாக்குகிறது.

பிரதானமாக, அமைதியாக நடந்த ஊர்வலத்தின் மீது 17 ரவுண்டுகள் துப்பாக்கிச் சூடு நடத்தப் பட்டுள்ளது. இளைஞர்கள், குறிப்பாக படித்த இளைஞர்கள் குறி வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். இச் சம்பவத்தை தொலைக் காட்சியைப் பார்த்துத்தான் தெரிந்து கொண்டேன் என்று கூறிய அப்போதைய அதிமுக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமிக்கு இச்சம்பவம் குறித்து நிமிடத்துக்கு நிமிடம் தெரிவிக்கப்பட்டது என்ற உண்மையை அப்போதைய தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், டிஜிபி ராஜேந்திரன், உளவுத்துறைஐஜி சத்தியமூர்த்தி ஆகியோர் தெரிவித்தனர் என்பதை ஆணையம் கூறியுள்ளது. மேலும், துப்பாக்கியால் சுட்ட ஒரு காவலர், சில காவலர்கள், துணை வட்டாட்சியர்கள், கலெக்டர் என வெகுசிலரை மட்டுமே குற்றவாளியாக அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் இப்போராட்டத்தை நசுக்க திட்டமிட்ட ஸ்டெர்லைட் நிர்வாகம், முக்கிய அரசு உயரதிகாரிகள், சாமானிய உடைகளில் காவலர்களை இறக்கி ராணுவத் துப்பாக்கியை வழங்க உத்தரவிட்ட காவல் அதிகாரிகள், அன்றைய முதல்வர், ஆளும் கட்சியினர் என இவர்களைக் குறித்து இந்த அறிக்கை எதுவும் கூறவில்லை.

எனவே, இந்த அறிக்கையில் வராத, ஆலை நிர்வாகிகள், அன்றைய முதல்வர் உட்பட உயர் அதிகாரிகள் மீது மக்கள் குறிப்பிடும் குற்றச் சாட்டுகளையும் விரைவாக விசாரித்து அறிக்கை வெளியிட வேண்டும். அதுவரை இந்த அறிக்கையில் குற்றம்சாட்டப்பட்டோரை பணி நீக்கம் செய்வதுடன் கடும் தண்டனையும் வழங்க வேண்டுமென எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தமிழ்நாடு மாநிலக் கமிட்டி தமிழக அரசாங்கத்தை வலியுறுத்துகிறது ■

## துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வை இருளில் தள்ளும் அரசாணை 152ஐ தமிழக அரசே உடனே திரும்பப்பெறு!

துப்புரவுத் தொழிலாளர்கள் தமிழகம் முழுவதும் தமது நியாயமான கோரிக்கைகளை முன்னிறுத்தி பல்வேறு சந்தர்ப்பங்களில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். குறிப்பாக, கோவை மாநகராட்சி துப்புரவுத் தொழிலாளர்கள் நீண்டகாலமாக நடத்திவரும் போராட்டத்தைத் தொடர்ந்து கடந்த 3.10.2022 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் மாநகர ஆணையர், வருவாய் ஆய்வாளர், தொழிற்சங்க பிரதிநிதிகள் ஆகியோர் பங்கேற்ற பேச்சுவார்த்தையில் தினக்கூலியாக ரூ721 வழங்கவேண்டும், பணிநிரந்தரம், வார விடுமுறை போன்ற பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற மாநகராட்சி நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட ஆட்சியர் அறிவுறுத்தியதன் பேரில் மாநகர மன்ற கூட்டத்தில் இதுகுறித்து தீர்மானம் நிறைவேற்றப்படும் என உறுதியளிக்கப்பட்டது.

தொடர்ச்சி 6ம் பக்கம்

# அரசுப் பள்ளிகளில் 'சிற்பி' திட்டம் – கல்வி கற்கும் நோக்கத்தைச் சிதைக்கும் செயல்

சிறார் குற்ற செயல்களுக்கு தீர்வு காணவும், மாணவர்களை நல்வழிப்படுத்தவும் 'சிற்பி' (SIRPI - Students In Responsible Police Initiatives) என்ற திட்டம் ரூ4.25கோடியில் செப்டம்பர் 14, 2022 அன்று தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. "சிறுவர்களை சமூக ஒழுக்கத்துடன் வளர்க்க வேண்டியது நம் கடமை. அப்படி உருவாகும் இளைஞர்கள் சிறந்த சமுதாயத்தை உருவாக்குவார்கள்" என்று அவர் கூறியுள்ளார்.

### திட்டத்தின் நோக்கமாகக் கூறப்படுவது

சென்னையில் பெருகி வரும் குற்றச்செயல்களை தடுக்கும் நடவடிக்கைகளில் ஒரு பகுதியாக சிறார் குற்றங்களை தடுக்கவும், போதைப்பொருள் உள்ளிட்ட தீய பழக்கங்களை தவிர்க்கவும், பள்ளி மாணவர்களை நல்வழிப்படுத்தும் வகையில் சென்னை மாநகர காவல்துறை சார்பில் 'சிற்பி' என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், சென்னை மாநகராட்சியில் 100 பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு பள்ளியில் இருந்தும் தலா 50 மாணவர்களுக்கு புதிய சீருடை மற்றும் பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

பள்ளிகளில் செயல்படும் தேசிய மாணவர் படை (என்சிசி) போல் காவல் துறையினரின் நிகழ்ச்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தும் வகையில் இந்த திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. 8ம் வகுப்பு முதல், மாணவர்களை தேர்வு செய்து அவர்களுக்கென தனி சீருடையும் வழங்கப்பட உள்ளது. அத்துடன், மாணவர்களை சுற்றுலா அழைத்துச் செல்லுதல், புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுக்கு அழைத்துச் சென்று அவர்களின் திறன்களை மேம்படுத்துதல், சமூகத்தில் பொறுப்புள்ளவர்களாக அவர்களை மாற்றும் வகையில், அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து சட்ட கல்வியறிவு பெறச் செய்தல் போன்றவையும் இத்திட்டத்தில் அடங்கும். இதுதவிர, காவல் கட்டுப்பாட்டு அறை அவசர எண், காவலன் செயலி, முதியோர் உதவி எண், காவல் கரங்கள் உள்ளிட்ட அவசரகால எண்கள் குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டுவதுடன், அவர்களைக் கொண்டு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் இத்திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளியிலும் 2 ஒருங்கிணைப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். இப்பள்ளிகளில் ஒவ்வொரு புதன்கிழமையும் மாணவ, மாணவிகள் இரு ஒருங்கிணைப்பு அதிகாரிகளின் முன்னிலையில் கூடுவார்கள். அவர்களுக்கான வகுப்புகளை காவல் அதிகாரிகள், துறைசார் நிபுணர்கள் நடத்துவார்கள். இதற்காக புத்தகம் ஒன்றும் வழங்கப்படும். வகுப்புகளில் அவர்களுக்கு ஊட்டச்சத்து மிக்க உணவுகள் வழங்கப்படும். மேலும், நிர்ணயிக்கப்பட்ட 8 இடங்களுக்கு மாணவர்கள் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர்.

### பெற்றோரின் எதிர்பார்ப்பு

பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய, தங்களது அன்றாட வாழ்க்கையை நடத்தவே அல்லல்படும் சாதாரண ஏழை, எளிய மக்கள் மிகுந்த சிரமத்திற்கிடையில் தங்களுடைய குழந்தைகளை கல்வி கற்கவே அரசுப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். தங்களது பிள்ளைகளாவது நன்றாகப் பயின்று சமூகத்தில் நல்ல மனிதர்களாக வலம்வர வேண்டும் என்பதே இப்பெற்றோர்களின் குறைந்தபட்ச எதிர்பார்ப்பாக இருக்கிறது. பள்ளிகளில் கற்பித்தலின் பிரதான நோக்கமே மாணவர்கள் அனைத்தையும் கற்றுணர்ந்து முழுமையான அறிவைப் பெற வேண்டும் என்பதே. அப்பொழுதுதான் அவர்களால் காரண, காரியங்களை ஆராய்ந்தறிந்து மேம்பட்ட சிந்தனைகளோடு, சமூக ஒழுக்கத்தோடு வளருவார்கள்.

### பள்ளிகளில் காவல்துறையின் தலையீடு

கல்வி நிலையங்களில் மட்டுமல்ல, சமுதாயத்திலிருந்தே போதை பொருட்களின் பயன்பாட்டை அறவே ஒழிக்க வேண்டிய காவல்துறை அவற்றின் புழக்கத்தை கட்டுப்படுத்த மாணவர்களை, அதுவும் கல்விகற்கும் மாணவர்களை ஈடுபடுத்துவது முறைதானா? கல்வி நிலையங்களில் போதை பொருட்களின் பயன்பாடு இருப்பதை காவல் துறையே ஒப்புக்கொண்டுள்ளது வெட்கக்கேடான விஷயம்!

போதை பொருட்களின் சந்தை என்பது இன்று சர்வதேச அளவில் மாஃபியா கும்பல்களால் நடத்தப்படுவது. அதன் பயன்பாடு சமூகத்தின் எல்லா மட்டங்களிலும் விரவியிருக்க, கல்வி கற்கும் பள்ளி மாணவர்களை, இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவது என்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. மிகப்பெரிய கட்டமைப்பைக் கொண்டுள்ள காவல்துறையே போதை பொருள் புழக்கத்தை கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்லும்போது, மாணவ, மாணவிகளை இதில் ஈடுபடுத்துவது எவ்வகையிலும் அவர்களை நல்வழிப்படுத்தாது. வளரிளம் பருவத்தில் இருக்கும் சிறார்களிடம் போதைப் பொருள் பயன்பாடு குறித்துப் பேசுவது என்பது அவர்களின் கவனத்தை முற்றிலும் திசை திருப்பி மாணவர்கள் தவறான பாதையில் செல்லவும், அதீத ஆர்வம் காரணமாக சில நேரங்களில் அவர்களின் உயிருக்கே ஆபத்தாகவும் முடியும். மேலும், இப்படிப்பட்ட திட்டம் பின்னாளில் அவர்களை குற்றவாளிகளாகவோ அல்லது காவல் துறையின் கைத்தடிகளாகவோ மாற்றும்.

உண்மையில், குற்றவாளிகளுடன் பழகும் காவல் துறையினரால் குழந்தைகளை கையாள முடியாது, அது தவறும் கூட. விசாரணை கைதிகள் நடத்தப்படும் விதம், மன அழுத்தம் காரணமாக நிகழும் காவலர்களின் தற்கொலைகள், தொடரும் லாக்கப் மரணங்கள் போன்றவையே இதற்கு சான்று. காவல்துறை சார்ந்து பல சீர்திருத்தங்கள் அத்துறையிலேயே தேவைப்படும் போது, பள்ளிகளில் அவர்களால் நன்மதிப்பு கொண்ட மாணவர்களை நிச்சயம் உருவாக்க முடியாது.

மாணவர்கள் அரசியலைத் தவிர்த்து தங்களது படிப்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று "அறிவுரை" சொல்லும் இன்றைய ஆட்சியாளர்கள், அவர்களுக்கு போதை பொருட்களின் பயன்பாடு குறித்து "வகுப்பு" எடுக்க வேண்டிய அவசியம் அல்லது நோக்கம் என்ன? புழுக்களாய் இருக்கும் வரை பட்டாம்பூச்சிகள் பறக்காது என்பதை அவர்கள் நன்கு அறிவார்கள். அவர்களுக்குத் தேவை (கல்வி)சிறகுகள் பெற்று வானில் சுதந்திரமாக சிறகடிக்கும் பட்டாம்பூச்சிகள்அல்ல, மாறாக முதுகெலும்பின்றி மண்ணில் நெளியும் புழுக்கள்தான். அப்படித்தான் மாணவர்களையும், இளைய சமுதாயத்தினரையும் வைத்திருக்க விரும்புகிறார்கள். ஆகவேதான் இத்திட்டம் நம்முள் கேள்விகளை எழுப்புகிறது. கல்வி கற்பிக்க போதிய நிரந்தர ஆசிரியர்கள் மற்றும் அடிப்படைத் தேவைகளை பூர்த்திச் செய்ய நிதியை ஒதுக்காமல் சிற்பி போன்ற பயனற்ற திட்டங்களுக்கு நிதியை ஒதுக்குவது ஏன்?

### மக்களின் கோரிக்கை

உளியின்றி சிற்பம்தான் உருவாகுமா? பள்ளிகளில் போதிய ஆசிரியர்களை நியமித்து, நூலகம், ஆய்வரங்கு, விளையாட்டு மைதானம் உள்ளிட்ட உள் கட்டமைப்பை மேம்படுத்தி, தரமான கல்வியை மாணவர்களுக்கு கொடுப்பது ஒன்றே அவர்களை ஒழுக்கம் உள்ளவர்களாகவும், சமூகப் பொறுப்பு உள்ளவர்களாகவும் ஆக்கும். மதசார்பற்ற, ஜனநாயகபூர்வ, அறிவியல்பூர்வ கல்வியின் மூலமாக, நல்ல பண்புள்ள ஆசிரியர்களின் வழிகாட்டுதலில் மட்டுமே மாணவர்கள் சமூகத்தின் மிக சிறந்த மனிதர்களாவார்கள். எத்தகைய இடர்ப்பாடு வந்தாலும் அநீதியை எதிர்த்துப் போராடும் மனஉறுதியையும் அவர்கள் பெறுவார்கள். பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் என்ற முக்கோணப் பிணைப்பில் காவல் துறையின் தலையீடு என்பது நிச்சயம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல. எனவே இத்திட்டத்தை முற்றிலுமாக கைவிட அரசை நிர்ப்பந்திப்பது சமூகப் பொறுப்புள்ள நமது ஒவ்வொருவரின் கடமையாகும் ■

# அணைகளின் உபரி நீரை அருகாமை கண்மாய்களுக்குத் திருப்பிவிட திட்ட மதிப்பீடு கோரி – ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் மனு சமர்ப்பிப்பு




வத்தலக்குண்டு சுற்று வட்டார விவசாயிகள் எமது விவசாய சங்கமான ஏஐகேகேஎம்எஸ் தலைமையில் திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தாலுகா வத்தலக்குண்டு வட்டாரம் சார்பில் கடந்த பல மாதங்களாக அப்பகுதியிலிருக்கும் வைகை அனை, மஞ்சளாறு அணை, சோத்துப்பாறை அணைகளின் உபரி நீரை வறண்டு கிடக்கும் தங்கள் பகுதியிலிருக்கும் ஏரிகளுக்குத் திருப்பி விடக்கோரி போராடிக் கொண்டிருக்கின்றனர். முன்னதாக தமிழ்நாடு முதலமைச்சர், மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மனுக்கள் அனுப்பப்பட்டிருந்தன. அதன் ஒரு பகுதியாக 10.10.2022 அன்று மாநிலச் செயலாளர் தோழர் சுருளியாண்டவர், உப தலைவர் தோழர் சதீஷ் குமார் தலைமையில் மதுரை செயற்பொறியாளர் நீர்வளத்துறை திட்டம் மற்றும் வடிவமைப்பு கோட்ட அலுவலரிடம் திட்ட மதிப்பீடு கோரி மனு அளிக்கப்பட்டது ■

# "ரஷ்யாவே, உக்ரைனை விட்டு வெளியேறு நேட்டோவே, ராணுவத் தளவாடங்களை அகற்று"

## அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கம் அறைகூவல்!

*அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கத்தின் (All India Anti-Imperialist Forum) துணைத் தலைவர் தோழர் மணிக் முகர்ஜி அக்டோபர் 7, 2022 அன்று வெளியிட்டஅறிக்கை:*

உக்ரைனில் ரஷ்யா ஊடுருவி நடத்திக் கொண்டிருக்கும் போரைப் பற்றி நாம் அறிவோம். இந்தப் போர், ரஷ்ய மற்றும் அமெரிக்க (USA) ஏகாதிபத்திய சக்திகளுக்கிடையேயான மோதலின் வெளிப்பாடன்றி வேறில்லை. கோவிட் 19 பெருந்தொற்றிலிருந்து மனிதயினம் பிழைத்து மூச்சுவிடுவதற்குள்ளேயே துவங்கிவிட்ட இந்தப் போர் ஆறு மாதங்களுக்குமேல் நீடித்துக் கொண்டு பேரழிவை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது.

யுத்தம் செய்யும் நாடுகளுக்கிடையே ஏதாவது உடன்படிக்கை ஏற்பட்டு போர் முடிவுக்கு வரும் என்ற எதிர்ப்பார்ப்பு நீர்த்துப் போய்விட்டது. மாறாக, போர் மேலும் உக்கிரமாகிறது. உக்ரைனுக்கு அமெரிக்கா மேன்மேலும் ராணுவத் தளவாடங்களை வழங்கி உக்ரைனை தூண்டி விடுகிறது. யுஎஸ்ஏவின் தூண்டுதலில் நேட்டோ நாடுகள் ரஷ்யா மீது பொருளாதார, வணிகத் தடைகளை வித்தித்துள்ளன. ரஷ்யாவும் ஒருபுறம், சில நாடுகளின் ஆதரவைப் பெற்றுள்ளது. சீனா ரஷ்யாவை எதிர்க்கவில்லை. தனது ஏகபோக முதலாளிகளின் நலன்களுக்காக இந்தியாவும் சீனா, பாகிஸ்தானுடன் இணைந்து பிப்ரவரியில் ரஷ்யாவிற்கு எதிராகப் போடப்பட்ட ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை தீர்மானத்தில் வாக்களிக்காமல் நடுநிலை வகிப்பதுபோல் காட்டிக்கொண்டது. உக்ரைனின் 4 பகுதிகளை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் ரஷ்யாவின் முடிவை எதிர்த்து ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புக் கவுன்சிலில் நடந்த ஓட்டெடுப்பிலும் இந்தியா பங்கேற்கவில்லை.

செப்டம்பர் 15–16, 2022ல் உஸ்பெகிஸ்தானின் சமர்கந்த் நகரில் நடைபெற்ற ஷாங்காய் கூட்டுறவு நாடுகள் அமைப்பு கூட்டம் பற்றிய ஊடகச் செய்திகள் போரை முடிவுக்குக் கொண்டுவர உதவும் என்ற நம்பிக்கையை மக்களில் சிலரிடம் தோற்றுவித்தன. ஆனால் அந்தக் கூட்டத்தில் இந்தியா உட்பட எந்த நாடும் போரை முடிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளவில்லை. மாறாக, இக்கூட்டத்திற்குப் பிறகு உக்ரைன்மீது ரஷ்யாவின் தாக்குதல் அதிகரித்து, முன்பைவிட அதிக உயிர்களைக் கொன்றுவருகிறது. அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம் என்றும் ரஷ்யா மிரட்டுகிறது. உக்ரைனின் 4 பகுதிகளை கைப்பற்றி ரஷ்யாவுடன் இணைத்துவிட்டோம் என்றும் சமீபத்தில் அறிவித்துள்ளது.

ரஷ்யாவின் மூர்க்கத்தனமான இப்போக்கை அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. உண்மை என்னவென்றால், இப்போரில் ஒவ்வொரு முதலாளித்துவ–ஏகாதிபத்திய நாடுகளும் தனது சொந்த நலனைக் கொண்டுள்ளது.

மிகவும் சுருங்கிவிட்ட நெருக்கடி மிகுந்த பொருளாதாரச் சந்தையைப் பிடிப்பதற்கும், விட்டதை மறுபடியும் பிடிப்பதற்கும், ஆதிக்கம் செலுத்துவதற்கும் ஏகாதிபத்திய சக்திகளிடையே தீவிரப் போட்டியின் வெளிப்பாடே இந்த உக்ரைன் போராகும்.

உடனடிக் காரணமாக அவர்கள் என்ன சொன்னாலும் அவை அவர்களது உண்மை முகத்தையும் நோக்கத்தையும் தந்திரமாக மறைக்கப் பயன்படுத்தும் திரைகளாகும். உலக நாடுகளில் ஊடுருவி, சண்டித்தனமாக அந்நாடுகளை ஆக்கிரமித்து தனது ஏகாதிபத்திய நலனை மேற்கொண்டு விஸ்தரிக்கும் அப்பட்டமான, வரலாற்றிலிருந்து அறவே நீக்கமுடியாத, பிம்பத்தை அமெரிக்கா கொண்டுள்ளது.

முந்தைய சோவியத் ரஷ்யாவை முடக்கு வதற்காக மேற்கத்திய நாடுகளைக் கொண்டு அமெரிக்காவால் உருவாக்கப்பட்ட நேட்டோ தற்போது ஆக்ரோஷமான சக்தியாக விளங்கு கிறது. ராணுவத்தைக் கொண்டு பல நாடுகளை அது தாக்குகிறது. அதேபோல, முன்பு சோசலிசமாக இருந்து, பின்னால் எதிர்ப்புரட்சி யின் மூலம் 1990ல் முதலாளித்துவ நாடாக மாறிய ரஷ்யாவும் தற்போது ஏகாதிபத்திய சக்தியாக தோன்றியுள்ளது. முதலாளித்துவ பொருளா தாரத்தைக் கடைப்பிடிப்பதால் அதுவும் தீவிர சந்தை நெருக்கடியிலிருந்து விடுபடவில்லை. சந்தைப் போட்டியில் ரஷ்யாவும் அமெரிக்கா மற்றும் நேட்டோ நாடுகளுடன் மோதலில் இறங்க வேண்டியதாயிற்று. எனவே 1990லிருந்தே, அமெரிக்காவுடன் ரஷ்யா, சீனா ஒரு புதிய பனிப்போரை நடத்தத் துவங்கியது. அவ்வப்போது அது நிஜப் போராகவும் வெடிக்கிறது. முதலாளித்துவ சந்தைப் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இயங்குவதை நிறுத்தி துருப்பிடித்துள்ள உற்பத்திச் சக்கரத்தை போர் என்ற மசகு எண்ணையைக் கொண்டுதான் சுற்றவைக்க, போரின் மூலம் செயற்கைச் சந்தையை உருவாக்கி ராணுவ உற்பத்தியை பெருக்கி உற்பத்தி சக்கரத்தை தொடர்ந்து சுற்றவைக்க, முதலாளித்துவ–ஏகாதி பத்திய நாடுகளுக்கு போரைத் தவிர வேறு வழியில்லை.

இந்தப் போர், ஒவ்வொரு நாட்டின் பணக்கார ஏகாதிபத்திய முதலாளிகளுக்குத்தான் பயனளிக்கிறது. போர்களால் மக்களின் வாழ்க்கையோ ஓட்டாண்டியாகிவருகிறது. உயிர் சேதம், வேலையிழப்பு, வீடுகள் இடிப்பு, பட்டினி போன்ற எண்ணற்ற கொடுமைகளை சாமானிய மக்கள்தான் சந்திக்கின்றனர். போரால் சூறையாடப்பட்ட ஈராக், ஆப்கானிஸ்தான், சிரியா, லிபியா போன்ற நாடுகளில் மக்கள் நிலைமை இதுதானாகும். தற்போது உக்ரைன் மக்களும் இப்பட்டியலில் இணைவார்கள். இத்துடன் நிற்கப் போவதில்லை. போரின் மூலம் பணக்காரர்களின் பெட்டிகள் நிரம்ப, நிரம்ப ஒவ்வொரு முதலாளித் துவ–ஏகாதிபத்திய நாடுகளிலுள்ள சாமானிய மக்களின் வாழ்க்கை நசிந்து நலிவுற்று வரும்.

முதலாளித்துவ நெருக்கடிக்கும் ஏகாதிபத்தியப் போருக்கும் ஏன் சாமனிய மக்கள் வரிகட்ட வேண்டும்? உலகம் முழுவதும் இருக்கும் அமைதியை விரும்பும் மக்களாகிய நாம் இந்தப் போரை உடனே நிறுத்தக் கோரி, ரஷ்யாவையும் யுஎஸ்ஏ / நேட்டோவையும் வலியுறுத்த வேண்டும். ஏகாதிபத்திய சக்திகளின் போர் முயற்சிகள் அனைத்தையும் நாம் எதிர்க்கவேண்டும்.

எனவே, ரஷ்யா உக்ரைன் போரை எதிர்த்துக் குரல் கொடுப்போம். நேட்டோவை கலைக்க வலியுறுத்துவோம் ■

**உக்ரைன் மீதான ரஷ்யப் போரைக் கண்டித்து தெலுங்கானாவிலும் குஜராத்திலும் அகில இந்திய ஏகாதிபத்திய எதிர்ப்பு அரங்கத்தின் சார்பில் போராட்டங்கள்**






# சிபிஐ(எம்)மும் பாஜகவும் அதானி குழுமத்தின் வர்க்க நலனுக்கு சேவை செய்கின்றன

*அகில இந்திய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் சங்கம் (AIKKMS) தலைவர் தோழர் சத்தியவான், பொதுச் செயலாளர் தோழர் சங்கர் கோஷ் ஆகியோர் 04.11.2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

திருவனந்தபுரம், அதானி துறைமுகத்துக்கு எதிராக கேரள மீனவர்கள் கடந்த 100 நாட்களாகப் போராடி வருகின்றனர். இந்த அதானி துறைமுகம் சாமானிய மக்கள் நலனுக்கு, குறிப்பாக மீனவர்கள் நலனுக்குத் தீங்கு விளைவிப்பதாக இருக்கிறது. போராட்டம் துவக்கப்பட்ட நாள் முதற்கொண்டே ஏஐகேகேஎம்எஸ் போராடும் மீனவர்களுக்குத் துணைநின்று அப்போராட்டத்தை வெற்றிபெறச் செய்ய முடிந்த வரையில் உதவிக் கொண்டிருக் கின்றது.

இப்போராட்டம் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வருகிறது. இதனால் அச்சமடைந்திருக்கும் கேரள ஆளும் கட்சியானது பன்னாட்டு நிறுவன அதானியின் நலனைப் பாதுகாத்திட, மோசமான பாசிச பாஜகவுடன் கைகோர்த்துக் கொண்டிருக் கின்றது. இந்தப் பாசிச பாஜக–சிபிஐ (எம்) க்கு எதிராக இப்போது பாடுபடும் மீனவர்கள் போராடிக் கொண்டிருக்கின்றனர். தளரா உத்வேகத்துடன் அவர்கள் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து கொண்டிருக் கின்றனர்.

இப்போராட்டத்தை வெற்றிகரமாக்கிட இந்நாட்டு மக்கள், குறிப்பாக தொழிலாளர்கள், விவசாயிகள் யாவரும் முன்வந்து, போராடும் மீனவர்களுக்கு துணைநிற்க வேண்டுமென நாங்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம் ■




**கன்னியாகுமரியில் சிஐடியுவின் 15வது மாநில மாநாட்டில் ஏஐயுடியுசி-ன் (ஆல் இண்டியா யுனைடெட் டிரேடு யூனியன் சென்டர்) மாநிலச் செயலாளர் தோழர் சிவகுமார் வாழ்த்துரை**



**2020 மின்சார சட்டத் திருத்த மசோதாவை திரும்பப்பெறக் கோரி அகில இந்திய மின்சார நுகர்வோர் சங்கம் சார்பில் விழுப்புரத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**

# தோழர் உதயகுமார் அவர்களுக்கு செவ்வணக்கம்!



**தோழர் உதயகுமார்**

*எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் தேனி–திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினரான தோழர் உதயகுமார் (64) அவர்கள் அக்டோபர் 27 மாலை உடல் நலக்குறைவால் இயற்கை எய்தினார். மறுநாள் மதியம் கட்சி மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. 1980களில் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு எமது எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் இணைந்தார்.* அனைத்து கட்சி பணிகளில் தன்னை முதல் தோழராக ஈடுபடுத்திக் கொள்வார். விருவீடு பகுதியில் பல கிராமங் களுக்கு பஸ் வசதிக்கான போராட்டத்திலும் விளாம்பட்டி தொழிலாளர் போராட்டத்திலும் எழுவனம்பட்டி சாயப்பட்டறை பிரச்சினை களுக்காகவும் வத்தலக்குண்டு நகர் பகுதியில் குடிநீர் பிரச்சினைக்காகவும் கணவாய்பட்டி மதுக்கடை, குடிநீர் பிரச்சினைகளுக்காகவும் நடந்த போராட்டங்களில் முன் நின்றார். 1986ல் கொண்டுவரப்பட்ட புதிய கல்விக் கொள்கையை எதிர்த்தும், போபால் விஷவாயு கசிவு மரணங்கள் சம்பந்தமாக பல கூட்டங்கள் நடத்துவதிலும் உலகமயம் தனியார்மயம் தாராளமயம் கொள்கையை எதிர்த்து நடந்த அகில இந்திய போராட்டங்களை பகுதியில் நடத்துவதற்கும் என்ஆர்சி, சிஏஏ எதிர்ப்பு போராட்டங்களிலும் எஸ்கேஎம் விவசாய போராட்டங்களிலும் சமீபத்தில் வெறியப்பன் நாயக்கன்பட்டி உள்ளிட்ட பல்வேறு கிராமப் பகுதிகளில் பாசன வசதி கோரி நடந்த போராட்டத்திலும் முன் நின்றார். பெண்கள் மீதான தாக்குதலில் கண்டித்தும் ஆபாச கலை இலக்கிய வலைதளங்களை தடை கோரியும் பல்வேறு போராட்டங்களில் முன் நின்றார். சுவரெழுத்து, பேனர் பணியை ஒரு கலை அம்சத்துடன் செய்வார். இளம் தோழர்களை மிகுந்த அன்புடன் அரவணைத்து நடத்துவார். அவரால் கட்சிக்கு வந்த தோழர்கள் வளர்ந்து கட்சியின் உயர் பொறுப்பிற்கு வந்தபோது அவர்களை தலைவராகவும் உரிய மதிப்புடனும் அவர்களுக்கு கீழ் முழுமனதோடு பணிபுரியவும் செய்தார். சிறுநீரக கோளாறால் நோய்வாய்ப்பட்ட நிலையில் கோவை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது நட்பின் பெயரில் கட்சிக்கு எதிராக செயல்பட்டு வெளியே சென்றவர்கள் அவருக்கு உதவி செய்ய முன் வந்தார்கள். அப்போது, கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோரிடமிருந்து வரும் எந்தவித உதவியையும் ஏற்க முடியாது என்று மறுத்து விட்டார். அதை தொடர்ந்து அவரின் மனைவியிடம் பண உதவியை ஏற்றுக் கொள்ள கூறினர். அவரது மனைவியும் தோழரின் நிலைபாடே தனது நிலைபாடு எனக்கூறி உறுதியாக அந்த பண உதவியை மறுத்துவிட்டார். தோழர் அவர்கள் தன் மனைவி மக்கள் மற்றும் உற்றார் உறவினர், நண்பர்களையும் தோழர் சிப்தாஸ் கோஷ் சிந்தனையின்பால் கொண்டு வருவதற்கு தொடர்ந்து முயற்சித்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் சமரசமற்ற போக்கை பின்பற்றிய பாரதி பகத்சிங் நேதாஜி போன்ற தலைவர்களது நினைவு தினத்தையும் மேரி கியூரி ஐன்ஸ்டீன் போன்ற விஞ்ஞானிகளுடைய சமூகப் பங்களிப்பையும் இளம் தலைமுறையிடம் கொண்டு செல்வதற்கு முயற்சித்தார். இப்படியாக கட்சிக்கும் புரட்சி நலனுக்கும் முக்கியத்துவம் கொடுத்து சொந்த வாழ்க்கையை இரண்டாம் பட்சமாக கொண்டு அப்போராட்டத்தை தனது வாழ்க்கையில் கடைப்பிடித்தார்.

*1990களின் மத்தியில் சில மாநிலத் தலைவர்கள் கட்சி விரோத நடவடிக்கைளின் காரணமாக கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டனர்.* அச்சூழ்நிலையில் உறுதியுடனும் விஸ்வாசமாகவும் கட்சியை உயர்த்திப் பிடித்து காத்து நின்றார். மேலும், ஒரு சில ஆண்டுகளுக்கு பின்பாக வாழ்க்கை சூழ்நிலை காரணமாக சில ஆண்டுகள் கட்சி பணிகளில் ஈடுபடாமல் இருந்த போதும் கட்சியின் விரோதிகளிடம் எந்த சமரசமும் இன்றி போராடி வந்தார். புரட்சிகர குணாம்சத்தை இழந்து விடாமல் கட்சியின் வர்க்க குணாம்சத்தை நிலைப்பாட்டை சரியாக புரிந்து கொண்டு மீண்டும் அதே ஊக்கத்துடன் இளந்தோழர் போல் கட்சிப் பணி ஆற்ற தொடங்கினார்.

அத்தோழரின் மறைவு உழைக்கும் மக்களின் போராட்டத்திற்கும், கட்சிக்கும் மிகபெரும் இழப்பாகும். தோழர் உதயகுமார் அவர்களின் வாழ்க்கை போராட்டத்தில் இருந்து கற்றுக்கொள்வோம்! தோழர் உதயகுமார் அவர்களுக்கு செவ்வணக்கம்!




**வத்தலக்குண்டுவில் நடைபெற்ற கட்சியின் தேனி–திண்டுக்கல் மாவட்ட அமைப்புக்கமிட்டி உறுப்பினரான மறைந்த தோழர் உதயகுமார் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் ரெங்கசாமி அவர்களின் அஞ்சலியுரை**

### தோழர் உதயகுமார் அவர்களின் நினைவுஞ்சலி கூட்டம்


கட்சியின் தேனி–திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினரும் வத்தலகுண்டு வட்டாரப் பொறுப்பாளருமான தோழர் உதயகுமார் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் **6.11.2022** அன்று மாலை **6** மணிக்கு வத்தலகுண்டுவில் உள்ள பிபிபி அரங்கத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தேனி திண்டுக்கல் மாவட்ட அமைப்புக் கமிட்டி உறுப்பினர் தோழர் சுருளியாண்டவர் தலைமை வகித்தார்.

கூட்ட மேடையில் வைக்கப்பட்டிருந்த தோழர் உதயகுமாரின் உருவப்படத்திற்கு அனைவரும் அஞ்சலி செலுத்தினர். கூட்டத்தில் கட்சியின் மாநில அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் சந்திரபோஸ், தேனி–திண்டுக்கல் மாவட்ட அகில இந்திய ஜனநாயக இளைஞர் சங்கத்தின் (AIDYO) தலைவர் தோழர் பாண்டி, அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கத்தின் (AIDSO) மாநிலத் தலைவர் தோழர் எம்ஜே வால்டர், அகில இந்திய மகளிர் கலாச்சார சங்கத்தின் (AIMSS) பொறுப்பாளர் தோழர் ஹில்டாமேரி ஆகியோர் தோழர் உதயகுமாரின் நினைவுகளைப் பகிர்ந்துகொண்டனர். அத்துடன் தோழர் உதயகுமாரின் நெருங்கிய உறவினர்களும் கட்சியுடன் அவர் எவ்வாறு நெருக்கமாக இருந்தார் என்பதைப் பகிர்ந்துகொண்டனர். இறுதியாக தமிழ்நாடு மாநில செயலாளர் தோழர் ஆ ரெங்கசாமி அவர்கள் தனது உரையில், தோழர் உதயகுமாரின் பல்வேறு உயர்ந்த குணாம்சங்களை எடுத்துக்கூறியதோடு தோழரது மறைவின் துயரத்தை புரட்சிகர உறுதியாக மாற்றிடுவோம் என உறுதியேற்று, இறுதியாக தனது செவ்வணக்கத்தை செலுத்தினார் ■

**தோழர் உதயகுமார் அவர்களுக்கு செவ்வணக்கம்!**

**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஓங்குக!**

## ஜாம்ஷெட்பூரில் தேர்வுக்கூட கண்காணிப்பாளர்கள் மாணவியின் ஆடைகளைக் களைய நிர்ப்பந்தித்ததைக் கண்டித்து – ஏஐடிஎஸ்ஓ



ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் அக்டோபர் 16ம் தேதியன்று மாணவியின் ஆடைகளை தேர்வுக் கண்காணிப்பாளர்கள் முழுமையாக கழற்றியுள்ளனர். அவமானம் தாங்கமுடியாமல் அம்மாணவி தன் மேல் நெருப்பு பற்றவைத்துக்கொண்டதால், பெரும் தீக் காயங்களால் அம்மாணவி அக்டோபர் 20ம் தேதி மரணமடைந்துவிட்டார். அம்மாணவிக்கு நீதி கேட்டு அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO - All India Democratic Students Organisation) சார்பில் காட்ஷிலாவில் பேரணி நடத்தப்பட்டது ■

## சென்னை வியாசர்பாடி மக்கள் அடிப்படை வசதி கோரி



சென்னை வியாசர்பாடி சத்தியமூர்த்தி நகரில் கட்டி முடிக்கப்பட்டு 3 மாதங்களே ஆன 13 மாடி கட்டிடங்களில் மழைநீர் ஒழுகுதல், லிப்ட் பராமரிப்புக்கு நிரந்தர ஆப்ரேட்டர்களை நியமித்தல், பராமரிப்பை மக்கள் தலையில் சுமத்தாது வாரியமே ஏற்றுக்கொள்ளல், சுற்றுப்புற சுவர் கட்டுதல் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி அக்டோபர் 10, 2022 அன்று தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய அலுவலகத்தை சத்தியமூர்த்தி நகர் மக்கள் போராட்ட கமிட்டியைச் சார்ந்த மக்கள் முற்றுகையிட்டு மனு அளித்தனர் ■

# மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனையே பாடுபடும் மக்களின் விடுதலைக்கான ஓரே பேராயுதம்

பாட்டாளி வர்க்கத்தின் மாபெரும் தலைவரும், எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் ஸ்தாபக பொதுச் செயலாளரும், எமது ஆசானும், வழிகாட்டியுமான தோழர் சிப்தாஸ் கோஷ் அவர்கள், ஆகஸ்ட் *5, 1923* அன்று பிறந்து ஆகஸ்ட் *5, 1976*ஆம் ஆண்டு மறைந்தார். அவரது பிறந்த நூற்றாண்டை இவ்வாண்டு முழுதும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி அனுசரித்து வருகிறது.

இச்சகாப்தத்தில், உன்னதமான மார்க்சிச–லெனினிச சித்தாந்தமே கோடானுகோடி இந்திய மற்றும் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைக்கு அறிவியல்பூர்வ வழிகாட்டியாக விளங்குகிறது. மார்க்சிச–லெனினிசத்தைப் பின்பற்றி பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள், சுரண்டும் நிலப்பிரபுத்துவ, ஏகாதிபத்திய ஆட்சியாளர்களையும் உள்நாட்டு முதலாளித்துவ வர்க்கத்தையும் அதிகாரத்திலிருந்து அகற்றி சோசலிசத்தை நிறுவின. ஆயினும், காலத்திற்கு ஏற்ப இச் சித்தாந்தத்தை வளர்க்கிறோம், மண்ணுக்கேற்ற மார்க்சிசம் என்று கூறிக் கொண்டு பல்வேறு நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகள் குறிப்பாக ரஷ்ய, சீனக் கம்யூனிஸ்டு கட்சிகள் முன்மொழிந்த கோட்பாடுகள் திருத்தல்வாத அபத்தங்களாகவே விளங்கின.

அத்தகைய, மார்க்சிசத்திற்கு எதிரான திருத்தல்வாதம், இறுதியில் அந்நாடுகளில் முதலாளித்துவ வர்க்கத்தை மீண்டும் அதிகாரத்திற்குக் கொண்டுவந்துவிட்டது.

கம்யூனிச சகாப்தம் முடிந்துவிட்டது என முதலாளித்துவவாதிகள் உலகம் முழுவதும் கைகொட்டிக் கொக்கரிதனர். இந்த எதிர் புரட்சிக்கான சாத்தியங்களை தோழர் ஸ்டாலின், தோழர் மாவோ தவிர வேறு யாரும் உய்த்துணர வில்லை: எதிர்பார்க்கவில்லை: எச்சரிக்கவில்லை: சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் ஸ்டாலின் மறைவிற்குப் பிறகு திருத்தல்வாதத் தலைமை அதிகாரத்திற்கு வந்துவிட்டதை தோழர் சிப்தாஸ் கோஷ் புரிந்துகொண்டார். பிறகு சித்தாந்தரீதியாக உருவாக்கப்பட்ட எல்லா குழப்பங்களையும், மார்க்சிசத்திற்கு எதிரான கருத்துகளையும், தோழர் சிப்தாஸ் கோஷ் மிகச் சரியாக ஆய்வுசெய்தார். மார்க்சிச–லெனினிச சித்தாந்தத்தை மிகச் சரியாக விளக்கியுரைத்து அதை புதிய உச்சிக்கு எடுத்துச் சென்று உழைக்கும் வர்க்கத்திற்கு நம்பிக்கை ஊட்டினார். அவரது புரட்சிகர வாழ்க்கையின் சில அம்சங்களை இங்கு காண்போம்.

அப்போதைய கிழக்கு வங்கத்தைச் சேர்ந்த (தற்போதைய வங்காளதேசம்) கீழ் நடுத்தரக் குடும்பத்தின் மூத்த மகனான இவர், மிகுந்த அறிவுக்கூர்மை உள்ள மாணவனாக விளங் கினார். அவர் தனது பெற்றோரிடம் கொண்டிருந்த ஆழமான அன்பு ஏழை மக்கள் மீதான அன்பாகப் பரிணமித்தது. மக்களின் முன்னேற்றமானது அன்று பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியில் இருந்து இந்தியா விடுதலை பெறுவதில் இருக்கின்றது என பதின்மூன்று வயதிலேயே தோழர் சிப்தாஸ் கோஷ் உணர்ந்தார். அக்கணமே அவர் தமது எதிர்கால வாழ்க்கைப் பாதை சுதந்திரப் போராட்டம்தான் என முடிவு செய்து விடுதலைப் போரில் ஈடுபட்டார்.

சுதந்திரப் போராட்டத்தின் தலைமை மிதவாதியான காந்திஜியின் கையில் இருந்தது. காந்தியின் தலைமையிலான காங்கிரஸ் இந்திய சுதந்திரத்தை ஆங்கிலேய ஏகாதிபத்திய முதலாளி களிடம் மன்றாடிப் பெற முயற்சித்தது. நிலவுடமை, சாதி, மதச்சடங்குகள், மூடப் பழக்கங்கள், அதிகார வர்க்கம் என அனைத்தோடும் சமரசம் செய்து கொண்டிருந்தது.

மாறாக, நேதாஜியின் தலைமை முழுமையான சுதந்திரத்தை போராடிப்பெறும் வழியிலும், சமரசமற்ற போர்க்குணப் போக்கு கொண்ட



**தோழர் சிப்தாஸ் கோஷ்**

தாகவும் இருந்தது. இந்தப் பாதை இளைஞராக இருந்த தோழர் கோஷை ஈர்த்ததில் வியப்பில்லை.

அதுமட்டுமின்றி, வங்கப் பிரிவினையைத் தொடர்ந்து கிளம்பிய மிகப் பெரிய ஆங்கிலேய எதிர்ப்புப் போராட்டமானது பல தீவிர புரட்சிகர இளைஞர்களை ஒருங்கிணைத்தது. புலின் பெஹாரி தாஸ் அவர்களால் 1906ல் “அனுசீலன் சமிதி” என்ற அமைப்பு துவக்கப்பட்டது. முதலில் டாக்காவிலும் பின்பு மேற்கு வங்கம், பீகார் என பல பகுதிகளிலும் பரவி வளர்ந்திருந்தது. பெயர் பெற்ற விடுதலை வீரர்களான அரவிந்தர், தேசபந்து சித்தரஞ்சன் தாஸ், சுரேந்திரநாத் தாகூர், ஜதிந்திரநாத் பானர்ஜி, பாகாஜதின் ஆகியோர் அதன் தலைமைக் குழுவில் அங்கம் வகித்தனர்.

விவேகானந்தரின் சீடரான நிவேதிதா தேவி அவர்களும் அக்குழுவில் பொறுப்பேற்றிருந்தார். *1930*க்குப் பிறகு இந்த அமைப்பு இரண்டாக உடைந்தது. இடதுசாரி சிந்தனை கொண்டோர் நேதாஜியை ஆதரித்தனர். இந்தப் பிரிவினரின் அழைப்பிற்கிணங்க குடும்பம், வீடு, படிப்பு அனைத்தையும் துறந்துவிட்டு, தோழர் கோஷ் சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றார்.

*17* வயதில், *1940*இல் அனுசீலன் சமிதியின் ஒரு பிரிவினர் ஆர்எஸ்பி (புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி) என்ற பெயரில் மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியை அமைக்கும் நோக்கத்தோடு வெளியேறிய போது தோழர் கோஷ் அவர்களுடன் இருந்தார்.

பின்னர் இரண்டாம் உலகப்போர் தொடங்கியதும் ஏகாதிபத்திய ஆட்சியாளர்கள் விடுதலைப் போராட்ட வீரர்களை மீண்டும் சிறைபிடிக்கத் துவங்கினர். பலர் கைது செய்யப்பட்டார்கள்; மற்றவர்கள் தலைமறை வானார்கள். ஸ்தாபனப் பொறுப்பை ஏற்றிருந்த தோழர் சிப்தாஸ் கோஷ் தமது நடவடிக்கைகளை டாக்காவில் இருந்து கல்கத்தாவிற்கு மாற்றிக்கொண்டு ‘வெள்ளையனே வெளியேறு’ இயக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்காற்றினார்.

*1942*ஆம் ஆண்டு தலைமறைவாய் இருந்த பொழுது அவரும் கைது செய்யப்பட்டு மூன்று ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருக்கும்போது அறிவியல்ரீதியான முறையில் ஒரு மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியாக ஆர்எஸ்பியை உருவாக்க உட்கட்சிப் போராட்டத்தைத் தொடங்கினார். அப்பொழுது ஆர்எஸ்பி கட்சி தலைவர்களிடம் கூறினார்: “இதுவரை விடுதலை இயக்கத்தின் குட்டி பூர்ஷ்வா தேசிய சித்தாந்தத்தால் வழிகாட்டப்பட்டதன் விளைவாக நாம் குட்டி பூர்ஷ்வா மனோபாவத் தையும், சிந்தனைப் போக்கையும், கலாச்சார அறநெறி எண்ணங்களையும் நம்முள் சுமந்து கொண்டிருக்கிறோம். எனவே, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் என்ற பாட்டாளி வர்க்க சர்வதேசிய சித்தாந்தத்தால் இந்த புதிய கட்சியை வளர்க்க வேண்டுமானால், முதலில் நமக்குள் தீவிரமான போராட்டங்களின் மூலம் மார்க்சிச கண்ணோட்டத்தையும் சிந்தனைப் போக்கையும் மனோபாவத்தையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதை அடைகிற போதுதான் ஒரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியை அமைப்பதில் நாம் வெற்றியடைய முடியும். இல்லையென்றால் மார்க்சிசம்–லெனினிசம் மீதான பற்றுறுதியும், ஒரு மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியைக் கட்டவேண்டும் என்ற மிகுந்த ஆர்வமும் இருந்தாலும், தவறான வழி முறையைப் பின்பற்றினால் நாமும் மற்றவர்களைப் போலவே இக் கட்சியை குட்டி பூர்ஷ்வா கட்சியாக தாழ்த்தி விடுவோம்.”


“பாட்டாளி வர்க்கத்தின் உண்மையான புரட்சிகரக் கட்சியில் நீங்கள் இணைய வேண்டுமானால், கம்யூனிஸ்ட் குணாம்சத்தைப் பெறுவதற்கான இந்தப் போராட்டத்தில் உங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். இந்தப் போராட்டத்தில் வெற்றி கண்ட பின்னரே இந்தப் புதிய கட்சிக்கு நீங்கள் தலைமை ஏற்க முடியும்.” என்பதையும் தெளிந்துரைத்தார்.

ஒரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியை கட்டுவதற்கான ஆரம்பகட்டத் தேவையான ஒரு கடுமையான தளர்ச்சியற்ற போராட்டத்தை தோழர் சிப்தாஸ் கோஷ் சிறைக்குள்ளேயே தொடங்கினார். *1945*இல் சிறையிலிருந்து வெளிவந்த பிறகும் இதே புரட்சி லட்சியத்தோடும், நோக்கத்தோடும் கட்சியை வளர்ப்பதற்காக தனது போராட்டத்தை முன்போலவே தொடர்ந்தார். ஆர்எஸ்பி கட்சியை ஒரு உண்மையான மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட் கட்சியாக வடிவமைக்கும் நோக்கத்துடன் கட்சி உறுப்பினர்கள் இடையே வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் தழுவிய ஆழமான சித்தாந்தப் போராட்டத்தின் மூலம் தத்துவார்த்த மத்தியத்துவத்தை (Ideological centralism) ஏற்படுத்து வதற்காக அவர்களிடையே சிந்தனையில் ஒருமை, (Uniformity of thinking) ஒரே சிந்தனை போக்கு, (One process of thinking) ஒரே மாதிரியான அணுகு முறை, (Oneness in opproach) ஒரே நோக்கம் (Singlenss of purpose) ஆகிய இவற்றை இயக்கவியல் பொருள்முதல்வாத சிந்தனை மற்றும் ஆய்வு முறையின் அடிப்படையில் அவர் துவக்கினார்.

தீவிரமான தத்துவார்த்த போராட்டங்களின் மூலம் புரட்சியையே வாழ்க்கையாகக் கொண்ட வர்களின் ஒரு குழுவை உருவாக்குவதற்கும் முயற்சித்தார். அதில் அவர் வெற்றிபெற

தொடர்ச்சி 6ம் பக்கம்

## மத்திய, மாநில அரசாங்கங்களின் கல்வி விரோதக் கொள்கைகளை எதிர்த்து – அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி



**அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி தமிழ்நாடு அமைப்பின் குழுவினர் 06.11.2022 அன்று சென்னையில் தமிழக அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவிடம் மாநிலக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகளை சமர்ப்பித்தனர்**

அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டி (AISEC - All India Save Education Committee) மத்திய மாநில அரசாங்கங்களின் மாணவர் விரோதக் கல்விக் கொள்கைகளை அதன் துவக்கம் முதற்கொண்டே இடையறாது எதிர்த்துப் போராடி வருகிறது. அதன் ஒரு பகுதியாக தமிழ்நாடு அரசாங்கத்தின் மாநிலக் கல்விக் கொள்கைக்கான முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசாங்கத்தின் உயர்மட்டக் கமிட்டி சென்னையில் நடத்திய கூட்டத்தில் அகில இந்திய கல்விப் பாதுகாப்புக் கமிட்டியின் தமிழ்நாடு அமைப்பு முன்வைத்தது ■

# மார்க்சிசம்–லெனினிசம்–சிப்தாஸ் கோஷ் சிந்தனையே . . .

5ம் பக்கத் தொடர்ச்சி

முடியவில்லை. ஆனால் வாழ் முறைப் புரட்சியாளர்களைக் கொண்ட எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை அமைப்பதில் வெற்றி கண்டார்.

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியைத் துவக்கிய திலிருந்து மிகக் கடுமையான உக்கிரமான போராட்டத்தின் புதிய கட்டம் தொடங்கியது. இருபத்தோரு வயது நிரம்பிய ஒரு இளைஞன் ஏறக்குறைய அதே வயதுடைய ஒரு சில தோழர் களுடன் எவ்வித ஆதரவும், பொருளுதவியும் இல்லாமல், எல்லாவிதமான இடையூறுகளுக்கிடை யிலும் ஒரு புரட்சிகர பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டுவது என்பது எவரும் கனவில்கூட நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று. ஆனால் அவரோ உண்மை என்று உணர்ந்ததை எப்போதும் வாழ்க்கையில் நடைமுறைப்படுத்து வதில் தன்னிகரற்ற உறுதியைத் தமது புரட்சிகர குணாம்சமாகப் பெற்றிருந்தார். எதுவும், எத்தகைய எதிர்ப்புகளும் அவரை பின்வாங்கச் செய்ய முடியவில்லை. மாறாக அதிக கஷ்டங் களிலும், அதிக எதிர்ப்புகளிலும்தான் அவர் தமது போராட்டங்களில் அதிக உறுதியோடும், தீர்மானத் தோடும் இருப்பார். எல்லாவித எதிர்ப்புகளிடை யேயும் நெஞ்சுறுதியுடன் கட்சிக்கு அடித்தளம் அமைத்தார்.

அவர் கூறினார்: "நான் தெருவில் மரணமடைய நேர்ந்தால் அதையும் எதிர்கொள்வேன்; இந்திய புரட்சிக்கு அது அவசியமாயிற்று என்று எண்ணிக்கொள்வேன்; மரணமடைய நேரும்போது, தலைநிமிர்ந்து பெருமிதத்துடன் இறப்பேன்", என்று பிற்காலத்தில் பல முறை கட்சி தோழர் களிடம் அவர் சொல்வது வழக்கம். "புரட்சியின் அவசியம் என்னைச் செய்யும்படி தூண்டுகிற எதையுமே என்னால் செய்ய முடியாமல் போகுமோ என கற்பனையிலும் என்னால் எண்ணிப் பார்க்க முடிந்ததில்லை. ஒரு புரட்சியாளனுக்கு முடியாதது என்று ஒன்று இருக்கமுடியும் என்பதை நினைப்பதை நான் மிகுந்த அவமானமாகக் கருதுகிறேன்.

இந்த தனிச்சிறப்பு வாய்ந்த புரட்சிகர குணாம்சமும், ஆழ்ந்த ஞானமும் மக்களைக் காந்தத்தைப் போன்று கவர்ந்து இழுத்தது. பிற்காலத்தில் கல்லூரிகளின், பல்கலைக் கழகங் களின் மிகச் சிறந்த மாணவர்கள் கூட அவர் நடத்திய அரசியல் வகுப்புகளுக்கு வருகை தருவது வழக்கம். ஆனால் இவர் கட்சியைக் கட்டிக் கொண்டிருந்த அந்த ஆரம்ப காலத்தில், யாரேனும் ஒருவர் சிறிது ஆர்வம் காட்டுவதாக கேள்விப் பட்ட மாத்திரத்தில், பல மைல்கள் நடந்து விரைந்து சென்று அவரிடம் மணிக்கணக்கில் விவாதிப்பார். பணபலம், ஊடக பலம், ரஷ்ய, சீன நாடுகளின் கம்யூனிஸ்ட் கட்சிகளின் சர்வதேச அங்கீகாரம் இல்லாமை, வேற்று கட்சித் தோழர்களின் கேலிகள், சீண்டல்கள், கிண்டல்கள் இவற்றால் தொய்வுற்று கட்சியின் சாதாரணத் தோழர்கள் ஓடோடி வந்து நம்மால் வெற்றிபெற முடியுமா என்ற தங்கள் சந்தேகத்தை முன்வைப்பார்கள். அப்போது தோழர் சிப்தாஸ் கோஷ் கூறுவார்: "முடியாது என்றே வைத்துக் கொள்வோம். வேறு என்ன செய்வது? இந்தப் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு வழக்கமான அடிமை வாழ்க்கைக்கு நாமும் அடிபணிந்து போவதா? அல்லது ஒரு கம்யூனிஸ்ட் கட்சியாக இல்லாத இந்திய கம்யூனிஸ்ட் கட்சியில் போய்ச் சேருவதா?

இப்படி நம் மனசாட்சிக்கு நாம் துரோகம் இழைக்கத்தான் வேண்டுமா? புரட்சிக்காக வேறு எதையும் என்னால் செய்ய முடியாவிட்டாலும் கூட, கட்சி அடித்தளத்திற்கான முதற்கல்லை யாவது நான் எடுத்து வைப்பேன். எதிர் காலத்தில், மற்றவர்கள் புரட்சிகரக் கட்சியின் மேல்தளத்தை அதன் மேல் எழுப்பிக் கொள்வார்கள். கனவு களோடும், ஆசைகளோடும், உயிரோடு இருக்கின்ற ஒவ்வொரு கணமும் எனது வாழ்க்கையின் அர்த்தம் என ஒன்றைத்தான் அறிவேன். நான் உயிரோடு இருக்கும்வரை ஒரு புரட்சியாளனாகவே இருப்பேன்." இவ்வாறு தம் புரட்சிகரத் தோழர்களுக்கு புரட்சிகர வாழ்க்கையின் மதிப்புகளைப் பற்றிய புதிய உணர்வை ஒவ்வொரு கணமும் ஊட்டினார். புரட்சிகர இலட்சியத்தின் பால் தளராத உறுதியை அளித்து, புரட்சிகரக் குணாம்சத்தால் எழுச்சியூட்டினார்.

ஓர் உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சியைக் கட்டுவதற்கான அறிவியல் ரீதியான போக்கை ஆரம்பத்திலிருந்தே கடைபிடிக்காமல், மார்க்சிசம்–லெனினிசத்தைத் தங்கள் இலட்சியமாக ஏற்றுக்கொண்ட சிலர் ஒன்று கூடி துவக்குவதனால் மட்டுமே ஒரு கட்சி உண்மையான பாட்டாளி வர்க்கக் கட்சியாக முடியாது என்ற உண்மையை அவரால் சரியாகப் புரிந்துகொள்ள முடிந்தது. இதை உணர்ந்து கொண்டதன் அடிப்படையில் பாட்டாளிவர்க்க புரட்சிகர இயக்கத்திற்கு உகந்த வாழ்க்கைக் கோட்பாட்டை உருவாக்குவதற்கான போராட்டத்தை துவக்கி கட்சியை கவனத்துடனும், நேர்மையுடனும் வளர்த்தார்.

"உலகத்தை மாற்றுவதற்கு தொழிலாளர்கள் முதலில் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டும்" என்ற மார்க்சின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அறிவுரையின் அடிப்படையில், கட்சியைக் கட்ட, தலைமை தாங்குபவர்கள் கம்யூனிஸ்ட் குணாம்சத்தைப் பெறுவதற்கான போராட்டத்தில் தம்மைக் கூட்டாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்து தம் பணியைத் தொடங்கினார். "இன்றைய சமுதாயத்தில் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் நமக்கு வழிகாட்டுகின்ற அறநெறி, தார்மீக ஒழுக்க நெறி, கடமையுணர்வு, பொறுப்புணர்வு (Obligation), மதிப்புகள் போன்றவை அனைத்தும் பூர்ஷ்வா கோட்பாடு களேயாகும். எனவே தொடர்ச்சியான விழிப்புணர்வுகொண்ட போராட்டங்களின் மூலம் பூர்ஷ்வா கோட்பாடு களை களைந்துவிட்டு கம்யூனிஸ்ட் கோட்பாடுகளைப் பெற்றால் மட்டுமே, பூர்ஷ்வா கண்ணோட்டத்திற்கு பதிலாக பாட்டாளி வர்க்க கண்ணோட்டத்தையும், இயக்கவியல் பொருள்முதல்வாத அல்லது மார்க்சிச அணுகுமுறையும் வளர்ப்பதனால் மட்டுமே நம்மை கம்யூனிஸ்டுகளாக வளர்த்துக் கொள்ள முடியும்" என்றார்.

இவ்வாறாக ஈடுயிணையற்ற, போராட்டங்களின் மூலம் இந்த மண்ணின் உண்மையான புரட்சிகரப் பாட்டாளி வர்க்கக் கட்சியான எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சிக்கு உறுதிவாய்ந்த அடித்தள மிட்டார். உழைக்கும் மக்களின் விடுதலைக்கான சரியான, அறிவியல்பூர்வ செயல்திட்டமான "முதலாளித்துவ எதிர்ப்பு சோசலிசப் புரட்சி" என்ற போர்த்திட்டத்தையும் (Strategy), அதை செயல்படுத்தும் உபாயங்களையும் (Tactics) தந்திருக்கிறார்.

அறிவாதாரயியலின் அனைத்துத் துறைகளையும் தழுவிய பரந்த அறிவுச் செல்வத்தையும், பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தின் வளர்ச்சி யடைந்த கோட்பாட்டையும் அவர் நமக்கு அளித்துச் சென்றுள்ளார். பாட்டாளி வர்க்கத்தின் ஒப்பற்ற தலைவரான தோழர் சிப்தாஸ் கோஷின் போதனைகளை உய்த்துணர்ந்து அவரால் ஸ்தாபிக்கப்பட்ட புரட்சிகரப் பாட்டாளி வர்க்க, எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியை, வலிமைப் படுத்துவதன் மூலம்தான் இந்திய பாட்டாளி வர்க்கம் எல்லாவகைச் சுரண்டல்களிலிருந்தும் தனது விடுதலையை அடைய முடியும். இக் கடமையை ஆற்ற அவரது பிறந்த நூற்றாண்டில் மீண்டும் உறுதியேற்போமாக! ■

# துப்புரவுத் தொழிலாளர்களின் வாழ்வை இருளில் தள்ளும் . . .

1ம் பக்கத் தொடர்ச்சி

இந்நிலையில், தமிழக அரசின் நகராட்சி நிர்வாகத் துறையின் கருத்து கோரப்பட்டபின்தான் தொழிலாளர்களின் இக்கோரிக்கைகள் குறித்து பரிசீலிக்கப்படும் என தனது வாக்குறுதியிலிருந்து பின்வாங்கியது கோவை மாநகராட்சி.

மாநகராட்சியின் அப்பட்டமான இந்த தொழிலாளர் விரோத போக்கைக் கண்டித்து அத்தொழிலாளர்கள் கடந்த **25**ம் தேதியிலிருந்து காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் குதித்தனர். வார விடுமுறை, குப்பை கொண்டு செல்ல பேட்டரி வண்டிகள் அளித்தல், காலை **7** மணிக்கு வேலை நேரத்தை துவக்குதல் போன்ற சில கோரிக்கைகள் நிறைவேறியத் தொடர்ந்து வேலைநிறுத்தம் தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டிருக்கிறது.

இப் பிரச்சினையில் கொடூரம் என்ன வென்றால், துப்புரவுத் தொழிலாளர்களின் பல்வேறு கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என திமுக தேர்தல் வாக்குறுதியளித்திருந்தது. எனவே மாநில திமுக அரசாங்கம் தம் கோரிக்கைகள் குறித்து ஒரு நல்ல முடிவை அறிவிக்குமென அத் துப்புரவுத் தொழிலாளர்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், ஏற்கெனவே நிரந்தரப் பணியிலுள்ள தொழிலாளர்கள் ஓய்வுபெற்றபின் அப்பணியிடங் களும் அவுட்சோர்ஸ் செய்யப்படும் என **20.10.2022** தேதியிட்ட ஒரு அரசாணையை திடீரென திமுக அரசாங்கம் வெளியிட்டுள்ளது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த **27**ம் தேதியன்று எமது தொழிற்சங்கமான ஏஐயுடியுசி (ஆல் இண்டியா யுனைடெட் டிரேட் யூனியன் சென்டர்-AIUTUC) யானது கோவை துப்புரவுத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளனைத்தையும் மாநகராட்சி நிர்வாகமும் தமிழக அரசும் உடனே நிறைவேற்ற வேண்டுமெனவும் அரசாணை **152**வுள்ள தொழிலாளர் விரோத, மக்கள் விரோத அம்சங்களை தமிழக அரசு உடனே திரும்பப்பெற வேண்டுமெவும் அறிக்கை வெளியிட்டது.

### திமுக அரசாங்கத்தின் தொழிலாளர் விரோதப் போக்கு

கடந்த அதிமுக அரசின் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத கொள்கைகள், நடவடிக்கைகளை எப்படியெல்லாம் திமுகவும் அதன் தலைவர் ஸ்டாலினும் விமர்சித்துவந்தனர்? இந்நிலையில் ஆட்சியில் அமர்ந்த மறுகணமே திமுக அரசாங்கம் தன் உண்மை முகத்தை காட்டத் துவங்கிவிட்டது. பல்வேறு துறைகளிலுள்ள ஒப்பந்தப் பணியாளர்களை நிரந்தரம் செய்யாமை, தொகுப்பூதியத்தில் ஆசிரியர்கள் நியமனம், தற்காலிக கல்லூரி விரிவுரையாளர்கள் பணிநீக்கம், செவிலியர்களை பணி நிரந்தரம் செய்யாமை. அதேபோல் **25** வருடங்களுக்கும் மேலாக பணிபுரிந்துவந்த கழிவுநீரகற்று குடிநீர் வழங்கல் வாரியத் தொழிலாளர்கள் **1,800** பேர் வாரியத்தின் கீழ்பணிபுரிந்து வாரியத்திடமிருந்து ஊதியம் பெற்றுவந்தனர். தங்களை பணிநிரந்தரம் செய்யவேண்டுமென கோரிவந்த நிலையில், அவர்களனைவரையும் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் திடீரென ஒப்பந்த முறைக்கு மாற்றப்பட்டனர். **10** நாட்கள் அவர்கள் போராட்டம் நடத்தியும் திமுக அரசாங்கம் அவர்களை அலட்சியப்படுத்தி பிடிவாத போக்கை கடைபிடித்தது.

தமிழகத்தில் சென்ற தேர்தல்மூலம் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதேயொழிய கொள்கை மாற்றம் ஏதும் ஏற்படவில்லை. முந்தைய அதிமுக அரசாங்கத்தின் மக்கள் விரோத கொள்கைகளின் தொடர்ச்சியாகவே அதன் நீட்டியாகவே திமுக தனது முதலாளித்துவ ஆட்சியை நடத்தி வருகிறது.


### மாநிலம் தழுவிய போராட்டத்தை துப்புரவுத் தொழிலாளர்கள் முன்னெடுக்க வேண்டும்

தமது நீண்டகால நிலுவையிலுள்ள கோரிக்கைகளை வலியுறுத்தியும் அரசாணை **152**வுள்ள தொழிலாளர் விரோத அம்சங்களைத் திரும்பப்பெற்று உள்ளாட்சித் துறையில் பணிபுரியும் துப்புரவு, வாகன ஓட்டுநர்கள் மற்றுமுள்ள அனைத்து தொழிலாளர்களும் நிரந்தரப் பணியில் மட்டுமே நியமிக்கப்படுவர் என்ற கொள்கை நிலைப்பாடை எடுக்க தமிழக அரசை வலியுறுத்தி தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பஞ்சாயத்து முதல் மாநகராட்சி வரை பணியிலுள்ள அனைத்து தொழிலாளர்களும் சரியான தலைமையின்கீழ் ஒரே அணியாய் ஒன்றிணைந்து மாநிலந்தழுவிய உறுதிமிக்க, விடாப்படியான போராட்டத்தை முன்னெடுத்தால் மட்டுமே துப்புரவுத் தொழிலாளர்கள் தம் கோரிக்கைகளை வென்றெடுக்க முடியும் ■

# தோழர் ஏ எஸ் ரவி அவர்களுக்கு செவ்வணக்கம்!

எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் புதுச்சேரி மாநிலக் குழுவின் சிறப்பு அழைப்பாளராகவும் காரைக்கால் மாவட்ட பொறுப்பாளராகவும் இருந்த தோழர் ஏ எஸ் ரவி அவர்கள் செப்டம்பர் 25ஆம் தேதி புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருதய நோய் காரணமாக அனுமதிக்கப்பட்டார். பல நாட்கள் சிகிச்சை பலனளிக்காமையால் இயற்கை எய்தினார். தோழர் அவர்கள் புதுச்சேரி காரைக்கால் மாவட்டத்தில் திருமலை ராயன் பட்டினம் என்ற கிராமத்தில் வசித்து வந்தார். 30 ஆண்டுகளுக்கு மேலாக இடதுசாரி இயக்கங்களின் செயல்பாட்டில் இருந்து வந்தார். 2017ஆம் ஆண்டு எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி தொடர்பால் சிப்தாஸ் கோஷ் சிந்தனையால் ஈர்க்கப்பட்டு எஸ்யுசிஐ கம்யூனிஸ்ட் கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டார். தன்னுடைய நீண்ட நெடிய இடதுசாரி இயக்கங்களின் வாழ்க்கை பயணத்தில் கண்டிராத புரட்சிகர கலாச்சார அம்சங்களை எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியில் கண்டபோது தன்னை மட்டுமல்லாது மனைவி மூன்று மகள்களையும் மகனையும் மருமகன்கள் உட்பட அனைவரையும் எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் வகுப்புகள், போராட்டங்களில் பங்கேற்க ஊக்க மளித்தார். அவர்களை செயல்பாட்டாளராகவும் மாற்று வதற்கு முழு முயற்சி எடுத்தார். எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சியின் அணுகுமுறை முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. இதுவரை எந்த கம்யூனிஸ்ட் கட்சியிலும் காணாத ஒன்றாக சரியாக இருக்கிறது என்று உளம் பூரித்துப் போனார். என் மகனையும் மகளையும் அழைத்து செல்லுங்கள் என்று தான் சந்தித்த தலைவரிடம் கூறினார்.

இரவு நேரங்களில் தூங்குவதற்கு முன்பு ஒட்டுமொத்த குடும்பத்தினருடன் உட்கார்ந்து கடுங் டீ குடித்துக்கொண்டு மார்க்ஸ் வாழ்க்கைப் பற்றியும் மார்க்சிசத்தைப் பற்றியும் அரசியல் பற்றியும் விவாதிப்பார். எப்படியாவது பிள்ளை களுக்கு சமூக உணர்வையும் தன்னம்பிக்கையும் சமூக மாற்றத்திற்கான செயற்பாட்டாளராக ஆக்கு வதற்கு அவரது புரிதலோடு அனைத்தையும் கற்றுக் கொடுத்தார். எப்போதும் நேர்த்தியான உடையுடன் சிரித்த முகத்துடன் தெளிவான வார்த்தைகளோடு நம்பிக்கை தளராத அணுகுமுறை அவரிடம் இருந்தது. பல்வேறு மக்கள் பிரச்சினைகளுக்கான போராட்டங்களில் முன் நின்று செயல்பட்டு உள்ளார். கைது செய்யப்பட்டும் உள்ளார். அத்தனை போராட்டங்களிலும் தன் குடும்பத்தினரையும் உற்றார் உறவினரையும் ஈடுபடுத்தினார். திருமலை ராயன் பட்டினத்தில் வீடற்ற எண்ணற்ற ஏழை மக்களுக்கு குடியிருக்க இலவச வீட்டுமனை கோரி நடந்த வெற்றிகரமான போராட்டத்தில் முன் நின்றுள்ளார். 2004ல் இப்பகுதியில் சுனாமி பேரலை தாக்கியபோது சுனாமி நிவாரண பணிகளில் ஈடுபட்டுள்ளார். தன் உடல்நிலை மோசமாகி மருத்துவமனைக்கு செல்லும் முன்வரை களப்பணி ஆற்றிவந்தார். புதுச்சேரி மாநில ஏஐயுடியுசி துணை செயலாள ராகவும் பணியாற்றி வந்தார். உலக தொழிற்சங்க (WFTU) அறைகூவலை ஏற்று ஏஐயுடியுசி சார்பாக ஏகாதிபத்திய உக்ரைன் போர் எதிர்ப்பு போராட்ட தயாரிப்புப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது நெஞ்சுவலி காரணமாக காரைக்கால் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். நோய் படுக்கையில் விழுவதற்கு முன் மக்கள் கோரிக்கைகளுக்கான வாகன பிரச்சார இயக்கத்தில் மும்முரமாக செயல்பட்டு வந்தார்.



**தோழர் ஏ எஸ் ரவி**

அந்த பிரச்சார இயக்கத்தில் ஒட்டுமொத்த குடும்பத்தினரையும் ஈடுபடுத்தினார். காரைக்கால் அரசு மருத்துவமனையில் மரணப் படுக்கையில் கிடந்தபோதும் கூட மகனை அழைத்து "மருத்துவமனை செயல்பாடு சரியில்லை. இதற்கு ஆர்ப்பாட்டம் நடத்த வேண்டும்" என்று கூறியுள்ளார். இன்றைக்கு அந்த தோழர் நம்மிடம் இல்லை. அவரது இழப்பு புதுச்சேரி மாநிலத்திற்கும் மக்கள் போராட்டத்திற்கும் பெரும் இழப்பாகும் ■

**தோழர் ஏ எஸ் ரவி அவர்களுக்கு செவ்வணக்கம்!**

**எஸ்யுசிஐ (கம்யூனிஸ்ட்) கட்சி ஓங்குக!**

# மரபணு மாற்ற கடுகுப்பயிர் அறிமுகத்தைக் கண்டித்து – எஐகேகேஎம்எஸ்

*அகில இந்திய விவசாயிகள் விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் (AIKKMS) தலைவர் தோழர் சத்தியவான், பொதுச் செயலாளர் தோழர் சங்கர் கோஷ் ஆகியோர் இணைந்து நவம்பர் 1, 2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

மரபணு பொறியியல் மதிப்பீட்டு கமிட்டியானது மரபணு மாற்ற கடுகுப் பயிரை வர்த்தக ரீதியில் பயிர் செய்ய முன்மொழிந்து இந்திய அரசாங்கத்தின் சுற்றுப்புறச் சூழல் அமைச்சரகத்தின் ஒப்புதலுக்காக அதை அனுப்பியிருப்பதாக நாங்கள் அறிகிறோம். இது ஒரு ஆபத்தான முடிவு என்றும் விவசாயிகளின் நலன்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்றும், சாமானிய மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக்கூடியது என்றும் நாங்கள் எண்ணுகிறோம்.

மரபணு மாற்ற விதைகளை இந்திய விவசாயத்தில் அறிமுகப்படுத்துவதனால் ஒட்டுமொத்த விவசாயமும் உள்நாட்டு, பகாசுர வெளிநாட்டு வேளாண் நிறுவனங்களின் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கைகளுக்குப் போய்விடும். இதன் ஆபத்தான விளைவுகளை நாம் சுலபமாக உணர்ந்து கொள்ளலாம்.

மேலும் மரபணு மாற்ற பயிர்கள் இயற்கை மீதும் மனிதனின் உடல்நலன் மீதும் ஏற்படுத்தும் தாக்கத்தை இன்னும் முறையாக மதிப்பிடவில்லை. அறிவியல் சமூகமும் இந்த விஷயத்தில் ஒன்றாக நின்று ஒரு நிலைப்பாட்டை எடுக்கவில்லை. இயற்கை மீது மோசமான விளைவையும் மனிதனின் சுகாதாரம் மீது மோசமான விளைவையும் இது ஏற்படுத்தும் என சில வல்லுனர்கள் கூறுகின்றனர். ஆக இந்த அம்சத்தையும் கருத்தில் கொண்டு மரபணு மாற்ற விதைகளை இந்திய விவசாயத்தில் அறிமுகப்படுத்தக் கூடாது என நாங்கள் கருதுகிறோம்.

மரபணு தொழில்நுட்பத்தால் லாபமடைபவர்கள் தான் மரபணு மாற்ற விதைகள் பயிரிடுவது உற்பத்தியை அதிகரிக்கும் என்கின்ற வாதத்தை முன் வைக்கிறார்கள். இவர்களின் வாதம் அடிப்படையற்ற ஒன்று. இந்தியாவில் இருக்கும் பட்டினிப் பிரச்சினை குறைந்த உற்பத்தியினால் ஏற்பட்டதல்ல. இப் பிரச்சினை ஏகபோக ஆதரவு அரசாங்கங்கள் மேற்கொண்ட மக்கள் விரோத கொள்கைகளினால் ஏற்பட்டதாகும். இதை பன்னாட்டு நிறுவனங்களும் அவற்றின் தலைவனாக இருக்கக்கூடிய மத்திய பாஜக அரசாங்கமும் நன்கறியும். இருந்தும் மரபணு மாற்ற விதைகளை அவர்கள் அறிமுகப்ப டுத்துகின்றனர்.

இதனை துணிச்சலுடனும் தைரியத்துடனும் நம் நாட்டு மக்கள் எதிர்ப்பதை தவிர வேறு வழி இல்லை. பன்னாட்டு நிறுவனங்களையும் மற்றும் அவற்றின் தலைவனாக இருக்கக்கூடிய பாஜக அரசாங்கத்தையும் எதிர்த்துப் போராட முன்வர வேண்டும் என இந்நாட்டு விவசாயிகளையும் பாடுபடும் மக்களையும் நாங்கள் வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம் ■

## உரங்கள் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




**உரங்கள் கள்ளச் சந்தையில் விற்கப்படுவதைத் தடுக்கக் கோரி வட இந்திய மாநிலங்களில் நடைபெற்ற போராட்டங்களின் ஒரு பகுதியாக மேற்கு வங்க மாநிலத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்**

Registered Newspaper
Posted at : Chennai Egmore RMS/1Patrika Channel
Posted on :
Publication : First week of Every Month

புரட்சி சிந்தனை

Registered with the Registrar of Newspapers for India No : 62018/1988

# மாபெரும் நவம்பர் புரட்சி தினம் அனுஷ்டிப்பு!



தேனி



மதுரை



சென்னை



சேலம்

# மருத்துவப் படிப்பை இந்தி மொழியில் கற்பிப்பதைக் கண்டித்து – ஏஐடிஎஸ்ஓ

*ஏஐடிஎஸ்ஓ பொதுச்செயலாளர் சௌரவ் கோஷ் அக்டோபர் 21, 2022 அன்று வெளியிட்ட அறிக்கை:*

'எம்பிபிஎஸ் படிப்பை இந்தியிலும் இதர பிராந்திய (இந்திய) மொழிகளிலும் கற்றுத்தருவதற்கு மத்திய அரசாங்கம் தயாராகி வருகின்றது. மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா முன்னிலையில் போபாலில் நடைபெற்ற நிகழ்ச்சியில் எம்பிபிஎஸ் படிப்புக்கான இந்தியில் எழுதப்பட்ட புத்தகங்களை மத்திய பிரதேச அரசாங்கம் ஏற்கெனவே வெளியிட்டுள்ளது. இது மாணவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று அரசாங்கம் நியாயப்படுத்துகிறது.

ஆனால், மருத்துவ அறிவியலை அதன் உயர்ந்த மட்டம் வரை படிப்பதும் கிரகிப்பதும் மிக மிக அவசியம் என்று நாங்கள் கருதுகிறோம். நமது நாட்டை பொருத்தவரை ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியிலும் மருத்துவ அறிவியலின் முழுமையான அறிவைப் பெறுவது சாத்தியமில்லை, ஏனென்றால் உலகம் முழுவதும் படிக்கப்படும் பெரும்பாலான அற்புதமான மருத்துவப் புத்தகங்கள், மருத்துவ அறிவியலில் மேற்கொள்ளப்படும் உயர்தர ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் எல்லாம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன, அதில் பயன்படுத்தப்படும் பெரும்பாலான வார்த்தைகள் ஆங்கிலத்திலும் லத்தீனிலுமே உள்ளன. அந்த நூல்களின் தரமான மொழிபெயர்ப்புகள் கூட இந்தியிலோ அல்லது மற்ற இந்திய மொழிகளிலோ இன்றுவரை இல்லை.

எனவே மருத்துவ அறிவியல் இந்தியிலோ அல்லது வேறு எந்த இந்திய மொழியிலோ பயிற்றுவிப்பது கிட்டத்தட்ட சாத்தியமில்லை. மேலும், இந்த நடவடிக்கை இரு வேறுபட்ட மருத்துவர்களை உருவாக்கிவிடும். ஒருதரப்பினர், ஆங்கிலத்தில் படித்து உயர் கல்விக்கு செல்வர், மற்றொரு தரப்பினர் இந்தியிலோ மற்ற இந்திய மொழிகளிலோ படித்துவிட்டு உயர்கல்விக்கு செல்ல இயலாமல் போய்விடும், அதோடு அவர்களது துறையில் முழுமையான அறிவைப் பெறுவதற்கு இது ஒரு பெருந்தடையாகிவிடும். இந்தியிலோ மற்ற வேறு எந்த இந்திய மொழியிலோ எம்பிபிஎஸ் படிக்கும் மாணவர் அதன் பிறகு மேற்படிப்பை, வெளிநாட்டில் மட்டுமல்லாது, இந்தியாவின் பிற மாநிலங்களில் படிக்க சென்றால் கூட சிரமங்களை எதிர்கொள்ள நேரும்.

மருத்துவ கல்வி மட்டுமல்ல, மற்ற உயர்படிப்புகளையும் அந்தந்த பிராந்திய மொழிகளில் பயிற்றுவிக்க வேண்டுமென்று தேசிய கல்விக் கொள்கை 2020 பரிந்துரைக்கிறது. பல்வேறு அரசாங்கங்கள் பிராந்திய மொழிகளை வளர்ப்பதில் அக்கறை காட்டாததால் அந்த மொழிகளெல்லாம் வளரவில்லை,

இந்த நிலையில் இதனை அமல்படுத்தினால் அந்தப் பகுதிகளில் கற்றல் மற்றும் கற்பித்தலுக்கு பெருந்தடை ஏற்பட்டு கல்வி சூழலில் பெருங்குழப்பம் ஏற்படும். இந்தி மொழியை முன்னெடுப்பதோடு, மருந்து சீட்டுகளில் 'ஸ்ரீ ஹரி' என்று எழுத வேண்டுமென்று மத்தியபிரதேச முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ அறிவியல் என்பது மதங்களுக்கும் ஜாதிகளுக்கும் அப்பாற்பட்டது என்பதால் இது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். ஒரு பொறுப்பான பதவியிலிருக்கும் ஒருவர் இவ்வாறு பொறுப்பற்ற முறையில் எப்படிப் பேசுகிறார்? மருத்துவ படிப்பை இந்தியில் கொடுக்கிறோம் என்ற பெயரில் இந்த உன்னதமான மருத்துவத்துறையையும் மதமயம், காவிமயமாக்க முயற்சிக்கின்றனர் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

மத்திய அரசாங்கம் கொண்டுவந்துள்ள தேசிய மருத்துவ ஆணையம் என்ற மோசமான சட்டமானது மருத்துவக் கல்வியை தனியார்மயமம், கார்ப்பொரேட்மயமாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது, சாமானிய மக்களுக்கான மருத்துவ சேவையை பறிப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ளது என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறோம். பெரும்பாலான மருத்துவக் கல்லூரிகளில் உரிய கட்டமைப்பு வசதிகளில்லை, பல கல்லூரிகளில் தேவையான உபகரணங்கள் இல்லை, பரிசோதனை வசதிகளில்லை, இதனால் மருத்துவ சிகிச்சையும் மருத்துவக் கல்வியும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. மருத்துவக் கல்வியின் அடித்தளம் சிதிலமடைந்திருக்கும் இந்த நேரத்தில் இதனை மூடி மறைப்பதற்காக இத்தகைய தவறான நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொள்கிறது.

உன்னதமான மருத்துவத்துறையை மதவாத சக்திகளின் தொடர் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதற்காக இந்த மக்கள் விரோத நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துவதற்காக ஒன்றுபட்டு போராட முன்வருமாறு மருத்துவ மாணவர்கள், மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள், சாமானிய மக்கள் அனைவரையும் அகில இந்திய ஜனநாயக மாணவர் சங்கம் (AIDSO) அறைகூவி அழைக்கிறது ■

*சோசலிஸ்ட் யூனிடி சென்டர் ஆஃப் இந்தியா (கம்யூனிஸ்ட்), தமிழ்நாடு மாநில அமைப்புக் கமிட்டிக்காக, அச்சிட்டு–வெளியிடுபவர்: ஆ ரெங்கசாமி அலுவலகம் : பு எண் 16 (ப எண் 18), இராட்லர் தெரு, சூளை, சென்னை 600 007 அச்சகம் : ஸ்ரீ அய்யனார் பிரிண்டர்ஸ், எண் 10, சுப்பாராவ் நகர், 2வது தெரு, சூளைமேடு, சென்னை 600 094, **ஆசிரியர்: ஆ ரெங்கசாமி***
Published by: A Rengasamy on behalf of Socialist Unity Centre of India (Communist), Tamilnadu State Organising Committee, from New No16 (Old No18), Rotler Street, Choolai, Chennai 600 007 and Printed at Sri Aiyanar Printers, No.10, Subha Rao Nagar, 2nd Street, Choolaimedu, Chennai 600 094. **Editor : A Rengasamy**
Tel : 044 - 2643 3169, 94445 51930 Email : suci_tn@yahoo.com Please visit our Website : **www.sucicommunist.org**